# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



1 1-15. [illegible]
103

அனுப்புநர் :

திரு.கி.சந்திரசேகர், B.E., M.T.P.,
துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.33I/95. கோட்ராம்பாளையம் தெரு,
இரங்கசாமிகுளம் அருகில்,
(Old Employment Office)
காஞ்சிபுரம்.
ddkanchidtcp@gmail.com.
தொலைப்பேசி எண்:044-27227937.

பெறுநர் :

செயல் அலுவலர்,
உத்திரமேரூர் பேரூராட்சி,
உத்திரமேரூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

ந.க.எண். 2900/2021/கா.மா-2: நாள்: .03.2022

ஐயா,

**பொருள்:** மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம் / பேரூராட்சி, நீராடி கிராமம், சர்வே எண்கள்.45/3B1B1, 45/4A-ல் 0.91 ஏக்கர் மனைப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. மனுதாரர் Thiru.J.M.Hussain, அவர்களின் கடிதம் நாள். 20.10.2021.
2. வேளாண் இணை இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் மூ.மு.எண்:6022/2021/இ2, நாள்:01.11.2021.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்:01.02.2022.(சாலை அமைப்பு வரைபடம் தயார் செய்து அனுப்பப்பட்டது)
4. அரசாணை (நிலை) எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.06.2004.
5. மனுதாரர் Thiru.J.M.Hussain, அவர்களின் கடிதம் நாள்.07.03.2022.(சாலை ஒப்படைக்கப்பட்டது)
6. அரசாணை (நிலை) எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
7. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
8. அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020.
9. அரசாணை (நிலை) எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, UD4(3), நாள். 23.09.2020.
10. அரசாணை (நிலை) எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள். 09.12.2020.
11. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 30.08.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல்ஏ1 நாள் : 08.09.17
13. சார்பதிவாளர்(பொ), உத்திரமேரூர் சார்பதிவகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.24/2022, நாள்.03.02.2022
14. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.14.03.2022 (கட்டணங்கள் செலுத்தக் கோரப்பட்டது)

15. மனுதாரர் Thiru.J.M.Hussain, அவர்களின் கடிதம் நாள்.17.03.2022-ல் (கட்டணங்கள் செலுத்தப்பட்டது). 105
16. நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் எண். 9860/10/முதி1 நாள்:20.9.16-ன்படி Online Application No.202101301015911, நாள்.05.10.2021.
17. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 4367/2019/TCP-2, நாள்.14.08.2021.
18. செயல் அலுவலர், உத்திரமேரூர் பேரூராட்சி அவர்களது கடிதம் ந.க.எண்.438/2021/அ1, நாள்.20.12.2021.

******

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.01.02.2022-ன் மூலம் மனைப்பிரிவுக்கான சாலை அமைப்பு வரைபடத்திற்கு இசைவளிக்கப்பட்டது. பார்வை 5-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டு அதன் தானபத்திர ஆவண எண்.818/2022, நாள்.03.03.2022–ன் ஒப்படைக்கப்பட்டு அதன் அசல் (ம) நகல், Online EC தானபத்திரம் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ(கா.மா)எண். **23/2022** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

2. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண். 9(ஆ)ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள் :

1. (a)பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7 (ம) 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி /நகராட்சி பகுதி எனில் " Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicants(s) directly.
(b) மாநகராட்சி /நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar

roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body". 107

2. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/14/சிபி. நாள் :04.07.14ன்படி "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம். குத்தகை பத்திரம். பட்டா, தானப்பத்திரம். பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

3. பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் (EWS) மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

4. பார்வை 11 மற்றும் 12-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

5. The Tamil Nadu Government in G.O. (Ms) No. 112, H & UD (UD4(3)), Department, dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any matter any plot, apartment or building, as in the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பின் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

7. பார்வை 4, 7, 8 மற்றும் 10-ல் காணும் அரசாணைகளின்படி மனைகளுக்கானகூராய்வு கட்டணம் ரூ.**5700/-**, நாள்.26.10.2021-ல் (ஏற்கனவே பெறப்பட்டது), நன்னிலை வரி ரூ.9,000/-, **Display Board** ரூ.10,000/-. **OSR** கட்டணம் **ரூ.54,000/-** (ம) **Armed Forces Flag Day Fund** ரூ.2000/- ஆகிய கட்டணங்கள் பார்வை 15-ல் சுட்டிய கடிதம் மூலம் பெறப்பட்டுள்ளது.

<u>இணைப்பு:</u>
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(4 தொகுப்பு மற்றும் அசல் தானபத்திரம்)

25.3.22

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
காஞ்சிபுரம்.

<u>நகல்:</u>

1. மனுதாரர் -- Thiru.J.M.Hussain,
S/o.T.A.B.Johny Basha,
78, Virattikuppam Road,
Villupuram – 605 602.
Ph.No.9600273096
E-mail: shriharifoundation@yahoo.com

2. <u>நகர் ஊரமைப்பு அலுவலகம்</u> – நகர் ஊரமைப்பு இயக்குநர்,
சி.எம்.டி.ஏ வளாகம்,
இ & சி மார்க்கெட் சாலை,
கோயம்பேடு,
சென்னை – 600 107.

3. இருப்பு கோப்பு -- (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம் - 1)

4. கோப்பு -- வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம் - 1)

5. **RERA** -- The Chair Person,
Tamil Nadu Real Estate Regulatory Authority,
CMDA Tower-II, 1st Floor, No.1A,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai – 600 008.

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம்.

கோப்பு எண். 2900/2021 /கா.மா-2 உத்திரமேரூர் பேரூராட்சி

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது,

4) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோக மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்புத்துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5) மனையின் ஊடே குறைந்த அழுத்த – உயர் அழுத்த மின்கம்பிப் பாதை, தந்திக் கம்பிப்பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்,

6) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்,

7) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்தது 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்,

8) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்பாக செயல் அலுவலர், உத்திரமேரூர் பேரூராட்சி, அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும், மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்,

9) அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி /இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகாரநிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைப்பத்தற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10) மனுதாரர், செயல் அலுவலர், உத்திரமேரூர் பேரூராட்சி, அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும், மனைப்பிரிவில் அமையும் அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் /விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள்

பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது, எனவே உண்மையில். நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது,

12) நில உரிமை குறித்த வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்புதுறையால் ரத்து செய்யப்படும்.

13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

14) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| விபரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 0.91 ஏக்கர் (அ) 0.37.40 ஹெக்டேர் | - |
| ஒதுக்கிய மனைகள் | - | 28 | - |
| <u>பொது ஒதுக்கீடு</u> மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது | | | |
| உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | | - | |
| உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு பொது உபயோகம் | - | 15.25 ச.மீ | 0.53% |
| தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. | - | 15.43 ச.மீ | 0.54% |
| கடை | - | 42.8 ச.மீ | 1.16% |
| பூங்கா 10% ஒதுக்கீடு செய்வதற்கு பதிலாக கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | | | |

25-3-22

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
காஞ்சிபுரம்.

115

உத்தரமேரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்.
பிறப்பிப்பவர் திருமதி ந. லதா, பி.காம்.,
திருவள்ளுவராண்டு 2053 / சுபகிருது வருடம் / ஆடி – 20

நி.மு.எண். 40/2022 அ 1

நாள் 05.08.2022.

பொருள் மனைப் பிரிவு அனுமதி – காஞ்சிபுரம் மாவட்டம் – உத்தரமேரூர் சிறப்புநிலை பேரூராட்சி– உத்தரமேரூர் வட்டம் – நீரடி கிராமம் சர்வே எண்கள். 45/3B1B1, 45/4A –இல் 0. 91 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை

01. அரசாணை எண். 71 ஊரக வளர்ச்சித் துறை நாள் 16.06.2003.
02.பேரூராட்சி மன்ற தீர்மானம் 49/2017 நாள் 15.02.2017.
03. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் கடிதம் ந.க.எண். 2900/2021 காமா–2 நாள் 31.01.2022.
04. தானப் பத்திரம் பதிவு எண். 1–வது புத்தகம் 818/2022 எண். பதிவு நாள் 03.03.2022.
05. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2900/2021 காமா 2 நாள் 25.03.2022.
06. அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017.
07. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020.
08. இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 40/2022 அ 1 நாள் 13.04.2022.
09. இவ்வலுவலக கடிதம் ந.எண்.40/2022 அ1 நாள் 13.04.2022. ( உதவி பொறியாளர், மின்சார வாரியம், உத்தரமேரூர் கடிதம் அனுப்பியது)
10. இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்.40/2022 அ 1 நாள் 13.04.2022.
11. இளநிலை பொறியாளர், உத்தரமேரூர் சிறப்புநிலை பேரூராட்சி சான்று நாள் 03.06.2022.
12. இளநிலை பொறியாளர், இயக்குதலும் பராமரித்தலும், நகர் பிரிவு, உத்தரமேரூர் கடிதம் எண்.Lr.No.JE/O&M/T/UTR/F.App. Tracking/D.No.Camp/2022 Dated 13.06.2022.
13. தெருவிளக்கு அமைக்க மதிப்பீடு கட்டணம் செலுத்திய நாள் 15.06.2022.
14. செயல் அலுவலர், உத்தரமேரூர் சிறப்புநிலை பேரூராட்சி நேரடி தல ஆய்வு நாள் 17.06.2022.
16. பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 51 நாள் 30.06.2022.
17. தொடர்புடையவைகள்.

-----

ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், உத்தரமேரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட உத்தரமேரூர் வட்டம் நீரடி கிராமம் சர்வே எண்கள். 45/3B1B1, 45/4A –இல் 0. 91 ஏக்கர் அல்லது 0.37.40 ஹெக்டேர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு திரு. J.M. உசேன், எண். 78 விராட்டிகுப்பம் ரோடு, விழுப்புரம் என்பவர் கோரியதில், துணை இயக்குநர். மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் 2900/2021 கா.மா.2 நாள் 31.01.2022 ன்படி சாலை அமைப்பு (Road Patten) வரைபடத்தின்படி சாலைகள், பூங்காக்கள், மூலை முடக்கு பகுதி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான பொது ஒதுக்கீடு மற்றும் உள்ளாட்சிக்கான பொது உபயோக பகுதி ஆகியவைகளை

பார்வை 4–ல் காணும் கடிதத்தின்படி மனுதாரரால் தானப் பத்திரம் மூலம் செயல் அலுவலர், உத்தரமேரூர் பேரூராட்சிக்கு உத்தரமேரூர் சார்பதிவகத்தில் 1–வது புத்தகம் 818/2022 எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. நாள் 03.03.2022.

துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2600/2021 கா.மா.2 நாள் 25.03.2022–ன்படி உத்தரமேரூர் வட்டம் நீரடி கிராமம் சர்வே எண்கள். 45/3B1B1, 45/4A –இல் 0. 91 ஏக்கர் அல்லது 0.37.40 ஹெக்டேர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம. வ. / ந. ஊ..இ. (கா.மா) எண். 23/2022 என எண்ணிடப்பட்டு 28 மனைகள் மற்றும் கடை 01 எண்ணிக்கை ஒதுக்கி மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டு மனைப்பிரிவு அமைக்க அனுமதி / இசைவு ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதத்துடன் வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இவ்வலுவலகம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மனைப் பிரிவில் அமையும் தெருக்களில் சாலை வசதி, வடிகால்வாய் வசதி, கல்வெர்ட் வசதி மற்றும் குடிநீர் குழாய் பதித்தல் போன்றவைகளுக்கு இவ்வலுவலக இளநிலைப் பொறியாளர் மதிப்பீடு தயாரித்துக் கொடுத்துள்ளதின் அடிப்படையில் அனைத்துப் பணிகளும் மனுதாரரால் இளநிலை பொறியாளர் முன்னிலையில் செய்து முடிக்கப்பட்டுள்ளதால் இவ்வலுவலக இளநிலை பொறியாளர் மேற்படி பணிகள் அனைத்தும் தன்முன்னிலையில் நல்ல முறையில் செய்து முடித்துள்ளதாக சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவில் தெருவிளக்குகள் அமைக்க இளநிலை பொறியாளர் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், உத்தரமேரூர் நகர் பிரிவினை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து மின்சார வாரிய இளநிலை பொறியாளரால் மதிப்பீடுகள் ரூ.86,300/–க்கு தயாரிக்கப்பட்டு மேற்படி மதிப்பீட்டுத் தொகையினை மனுதாரர் செயல் அலுவலர் பெயரில் மின்சார வாரியத்தில் 15.06.2022 அன்று செலுத்தியுள்ளார்.

மேலும் துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்துடன் வரப்பெற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, உத்தரமேரூர் பேரூராட்சிக்கு உட்பட்ட நீரடி கிராமம் சர்வே எண்கள். 45/3B1B1, 45/4A –இல் 0. 91 ஏக்கர் அல்லது 0.37.40 ஹெக்டேர் பரப்பளவில் மனைப்பிரிவு (28 எண்ணிக்கை மனைகள் மற்றும் 01 எண்ணிக்கை கடை) அமைக்க மனுதாரர் திரு J.M. உசேன் என்பவருக்கு பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 51/2022 நாள் 30.06.2022–ல் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மனைப் பிரிவு அபிவிருத்தி கட்டணத்தொகை ரூ.3,58,050/–ஐ (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து ஐம்பது மட்டும்) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, உத்தரமேரூர் கிளையின் வங்கிவரைவோலை எண். 144769760 நாள் 02.08.2022–ன்படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. செலான் எண்.1012/2022–23 நாள் 02.08.2022. இதனைத் தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்.</u>

01. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் கடிதத்தின்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கிய வரைபடத்தினை இவ்வலுவலகம் மூலம் அங்கீகாரம் அளித்து ஒரு நகல் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளின் நகல் ஒன்றும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

02. மனைப்பிரிவு நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள 1 முதல் 14 வரையில் உள்ள அனைத்தும் முழுவதுமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

03. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையினை உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டு நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது. மேலும் மனைப்பிரிவு நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள 1 முதல் 14 வரையில் உள்ளவை மீறி செயல்படுவதாக தெரியவந்தாலும் பேரூராட்சியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அனுமதியினை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

04. மனைப் பிரிவின் ஊடே செல்லும் தாழ்வழுத்த மின் கம்பி ( LT Line )-யினை மனைப்பிரிவின் சாலையின் போக்கிற்கு ஏற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

05. வரைபடத்தில் வடக்குப் பக்கம் 3.0 மீட்டர் அகலத்திற்கு 57.75 மீட்டர் நீளத்திற்கு (9.0 மீட்டர் அகல மனைப் பிரிவு சாலை தவிர்த்து) கட்டிடம் கட்டத் தடை செய்யப்பட்ட பகுதியாக துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி இடங்களில் அபிவிருத்திப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படக்கூடாது என தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் கட்டிடம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் ஏதும் செய்வதாக தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி மனைப்பிரிவு அனுமதி ரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்,
உத்தரமேரூர்சிறப்புநிலை பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

இணைப்பு

01. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்று
02. மனைப்பிரிவு நிபந்தனைகள் ஒன்று

பெறுநர்
திரு. J.M. உசேன்,
எண். 78 விராட்டிகுப்பம் ரோடு,
விழுப்புரம்

நகல்.

01. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், எண்.331/95 கோட்ராம்பாளையம் தெரு, இரங்கசாமி குளம் அருகில், காஞ்சிபுரம் அவர்களின் தகவலுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate